# 12 ஆண்டுகளுக்குப் பின் யாழ். முற்றவெளி மைதானத்தில் ஜன சமுத்திரம் அலைமோதியது!

விலை ரூபா 3-00

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 சித்திரை: 11 றம்ழான் பிறை: 27 இதழ்: 71
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-04-1990

(யாழ்ப்பாணம்)

யாழ். முற்றவெளி மைதானத்தில் 12 ஆண்டுகளுக்குப் பின்பு, லட்சோப லட்சம் மக்கள் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியையும், விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பிரமுர்களின் கருத்துக்களையும் கேட்க யாழ். குடாநாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் வந்திருந்தார்கள்.

யாழ். முற்றவெளி மைதானம், மக்கள் வெள்ளத்தினால் மறைந்திருந்தது. அந்த மக்கள் வெள்ளம், பிற்பகல் 4-00 மணி முதல் நள்ளிரவு வரை உரைகளைக் கேட்கவும், இசை மழையில் மூழ்கவும் அந்த

(8ம் பக்கம் பார்க்க)

தலைவர் பிரபாகரனால்

## தமிழினம் உலகத்தில் உயர்ந்து நிற்கிறது

### - கவிஞர் காசிஆனந்தன்

(யாழ்ப்பாணம்)

இன்று எமது தலைவர் பிரபாகரனால் தமிழினம் உலகத்தில் உயர்ந்துநிற்கிறது. பெருமை பெற்றுள்ளது. மானத்தையும் பெற்றிருக்கின்றது.''

''ராஜீவ் காந்தி பிரபாகரனின் தலையைக் கொண்டு வரும்படி கூர்க்காப் படைகளுக்கு உத்தரவிட்டார். ஆனால் கூர்க்காப் படைகளின் தலைகளைத்தான் ராஜீவ் காந்தி

(8-ம் பக்கம் பார்க்க)

★ தமிழ் மக்களே விழிப்பாயிருங்கள்

# தென்னிலங்கையில் இன்னும் நல்லமனமாற்றம் ஏற்படவில்லை

## முற்றவெளி இசை விழாவில் மாத்தயா

(யாழ்ப்பாணம்)

**“தென்னிலங்கையில் இன்னும் நல்ல மனமாற்றம் ஏற்படவில்லை. எம்மை அழிக்க நினைக்கும் சிங்கள பௌத்த மனப்பான்மை இன்றும் அழிந்துவிடவில்லை. தமிழீழ மக்களே விழிப்பாயிருங்கள்!”**



இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) நேற்றிரவு யாழ். முற்றவெளியில் நடைபெற்ற தேனிசைசெல்லப்பாவின் தமிழீழ எழுச்சிப் பாடல் நிகழ்ச்சியில் பங்குபற்றி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.ஸ்ரான்லி டொமினிக்

(8ம் பக்கம் பார்க்க)

## தேனிசை செல்லப்பாவுக்கு ‘கலைமாமணி’ பட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று மாலை யாழ் முற்றவெளியில் நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின்போது தேனிசை செல்லப்பாவுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து அவருக்கு ''கலைமாமணி'' என்ற பட்டத்தையும் வழங்கினர். (153)

கலை புராதன தொன்மைகளை

## கட்டியெழுப்பி புரட்சிகர சிந்தனையை வளர்க்கக்கூடியதாக அமையவேண்டும்

### - யோகி

(யாழ்ப்பாணம்)

''கலை, புராதன தொன்மைகளைக் கட்டியெழுப்பக்கூடியதாகவும், புரட்சிகரச் சிந்தனையை வளர்க்கக்கூடியதாகவும் அமையவேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம். எங்களுக்கு மொழி, நிலம், வரலாறு என்பவற்றோடு கலையும், கலாசாரமும் முக்கியமானவை.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி நேற்றிரவு யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி வைபவத்தின் போது உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு பேசியதாவது; இந்தப் பெருந்திரளான மக்களைப் பார்க்கும் போது மக்கள் மனங்களில் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது

(8ம் பக்கம் பார்க்க)

சிகரட், மதுபான

## பாவனை அதிகரிப்பால் அரச வருமானம் உயர்வு!

(கொழும்பு)

மதுபானம் அருந்துவோரும், புகை பிடிப்போரும் இணைந்து அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டிக்கொடுக்கும் பணியில் 5வது இடத்தை எட்டிப்பிடித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை தெரிவித்துள்ளது.

புகைபிடிப்போர், 1988ஆம் ஆண்டிலும் பார்க்க, 1989ஆம் ஆண்டில் 130 கோடி ரூபா மேலதிக வருமானத்தை அர

(8-ம் பக்கம் பார்க்க

தமிழனுக்காக பாடுகிறவனை

## தமிழக அரசு மதிக்காதபோதும், தமிழீழ அரசு மதித்துவிட்டது

### — தேனிசை செல்லப்பா



(யாழ்ப்பாணம்)

''தமிழனுக்காகப் பாடல்களைப் பாடுகிறவனைத் தமிழக அரசு இதுவரை மதிக்கவில்லை. ஆனால் இன்று தமிழீழ அரசு அந்தப் பாடகனை மதித்து கலைமாமணி என்ற பட்டமும், தங்கப் பதக்கமும் வழங்கியுள்ளது''.

இவ்வாறு நேற்று யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இசைநிகழ்ச்சியில் தேனிசை செல்லப்பா உரையாற்றுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''நான் இந்த வீரமண்ணில் காலடி எடுத்து வைத்ததும் அடைந்த மகிழ்ச்சி எண்ணிலடங்காது. இந்த மண்ணில் வீரமுள்ள விடுதலைப்போராளி

(8ம் பக்கம் பார்க்க)

## குஜ்ராலை சந்திக்க ஹேரத் விருப்பம்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு ஐ. கே குஜ்ராலை விரைவில் சந்திக்க இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் திரு. ஹரோல் ஹேரத் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இரு தரப்பும் சந்தித்து திகதியொன்று முடிவுசெய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார். இவ்வாறனதொரு சந்திப்பு இச்சந்தர்ப்பத்தில் மிக உதவியாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

விரைவில் இலங்கை-இந்திய நட்புறவு உடன்படிக்கை தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் ஹேரத் தெரிவித்துள்ளார் (சி)

இந்திய - இலங்கை கலாசார சம்மேளனம்

## ஜனதிபதி பிரேமதாசாவுக்கு விருது வழங்கி கௌரவிக்கும்

(கொழும்பு)

ஜனதிபதி திரு ஆர். பிரேமதஸா உட்பட உலக சமாதானத்துக்கான தங்களது பங்களிப்பை செய்த மூன்று உலகத் தலைவர்களுக்கு விருது வழங்குவதற்கு இந்திய இலங்கை கலாசார சம்மேளனம் முடிவு செய்திருக்கிறது.

இதன்படி ஜனதிபதி திரு. ஆர் பிரேமதாஸா, சோவியத் தலைவர் திரு. மிக்கைல் கோர்ப்சேவ், பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்க்கிரட் தட்சர் ஆகிய மூவரும் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

கல்வி

பாலராசிரியர் சங்கம் நடாத்தும் பாலராசிரியர் பயிற்சி நெறி 1990க்கு க. பொ. த. (சா/த)சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம் நேரில் வரமுடியாதோர் தபால்வழியிலும்பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (சி 3783)

கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறோயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3711)

# 84-ல் யாழ். தொல்பொருள் காட்சிச் சாலையிலிருந்து அநுராதபுரம்கொண்டுசென்றசீனநாட்டு மட்பாண்டங்கள் யாழ். திரும்பவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொல்பொருள் திணைக்களத்தின் தொல்பொருட் காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அல்லைப்பிட்டியில் கண்டெடுக்கப்பட்ட சீனநாட்டு மட்பாண்டங்கள் பெருந்தொகையானவை. 1984ம் ஆண்டு கடைசிப் பகுதியில் அநுராதபுரம் தொல்பொருட் காட்சிச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் இதுவரை இந்தப் பொருட்கள் யாழ்ப்பாணம் தொல்பொருட் காட்சிச்சாலைக்கு மீண்டும் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

அல்லைப்பிட்டியில் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கடற்கரையோரத்தில் ஆயிரக்கணக்கான பீங்கான் துண்டுகளும், பாத்திரங்களும் கண்டெடுக்கப்பட்டதும் 11ம் நூற்றுண்டைச் சேர்ந்த சீன நாட்டு மட்பாண்டங்கள்இலங்கையில் பெருந்தொகையாக வேறெங்கும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (153)

# அலுவலகம் - மண்டபம் - மைதானம் வவுனியா நகரசபைக்கு திருப்பி ஒப்படைக்கப்படும்

[வவுனியா]

வவுனியா நகரசபை மைதானமும், வவுனியா நகர சபை அலுவலகமும், மண்டபமும் வவுனியா நகர சபையிடம் திருப்பி ஒப்படைக்கப் படவிருக்கின்றன.

1983-ம் ஆண்டு இறுதியில் இலங்கைப் பொலிசாரினுல் கையேற்கப்பட்ட வவுனியா நகர சபை மைதானமும், நகரசபை மண்டபமும், அலுவலகமும் தொடர்ந்து பொலிசாரின் பாவனையிலேயே இருந்துவந்தது. இதனுல் நகர

(5ம் பக்கம் பார்க்க)

# முறைசாரா பிரிவில் பல வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப்பிரிவில் பலவெற்றிடங்கள் உள்ளன என்று முறைசாராக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்துள்ளார்.

''பட்டுக்கரை அச்சிடல் 35, தோற் பொருள் உற்பத்தி 30, கட்புல சாதனங்கள் உற்பத்தி 40, புத்தகம் கட்டுதல். காகித உற்பத்தி 25, விவசாய விஞ்ஞானம் 20, வானெலி பேணல் 35, வாகன மின் இணைப்பு 15, வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல் 20, உணவுபேணல் 20, பனம் பொருள் உற்பத்தி 20, வீட்டு மின் இணைப்பு 30, மோட்டார் திருத்துதல் 15, வீட்டு மின் இணைப்பு 30, மரத்தளபாட உற்பத்தி 15, மோட்டார் திருத்துதல் 25 ஆகிய வெற்றிடங்கள் உள்ளன'' என்று அவர் தெரிவித்தார்.

தும்புத் தொழில், வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல் போன்ற புதிய இரு பாடநெறிகளும், மருதங்கேணி தமிழ்க்கலவன் பாடசாலையிலும், குடத்தனை தமிழ்க்கலவன்பாடசாலையிலும் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

# வெளிநோயாளர் பிரிவில் நோயாளராகவரும் 'பலே' ஆசாமிகள்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில், கடந்த சில நாட்களாக திருட்டுச் சம்பவங்கள் மிகவும் அதிகரித்துள்ளன!

நாட்டில் நிலவும் சுமுகநிலையில் தற்போது தினமும் ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகிறுர்கள். நோயாளர்களின் நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசை காட்டுகின்றனர்,

இத்திருட்டுக்கள் அனைத்தும் ஒரே பாணியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்தவாரம் ஒருவரின் நிவாரணப்பணம் பெறுவதற்கான அத்தாட்சிப்பத்திரம், அடையாளஅட்டை, செலவுக்காக வைத்திருந்த சிறுதொகைப்பணம் உட்பட அவரது பணிபர்ஸ் திருடப்பட்டது.

அதேபோல் நேற்று முன்தினம் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறுவதற்காக சிட்டை எடுக்க காத்துநின்ற ஒருவரிடம் நூறுரூபாபணம், அடையாள அட்டை ஆகியவற்றுடன் மணிப்பர்ஸும் திருட்டுப் போயிற்று.

கடந்த ஒருமாத காலத்தில் பத்துக்கும் அதிகமான திருட்டுச்சம்பவங்கள் இங்கு நடந்துள்ளன. (56)

# அடுத்த தவணை முதல் சகல பாடசாலைகளிலும் மதிய உணவு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

''பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவுக்கான பணம் மேலிடத்திலிருந்து கிடைக்கவிருக்கின்றது. பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகிய பின்னர் எக்காரணம் கொண்டும் பாடசாலைகளில் இனிமேல் மதிய உணவு வழங்காமல் இருக்க முடியாது''

இவ்வாறு யாழ். கல்வித்திணைக்களப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் 'ஈழநாடு' க்குத் தெரிவித்தார்.

''உணவு தயாரிக்கும்போது பாடசாலை மாணவர்களையோ ஆசிரியர்களையோ பயன்படுத்தக்கூடாது. மாணவர்கள் மதிய உணவுக்காக இடைவேளையில் வீடுகளுக்குச் செல்லவும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.'' இதற்கான சுற்று நிருபம் யாழ். கல்வித்திணைக்களத்தால் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் விளக்கினுர். (152)

# தபால் மோசடி விரைவில் அம்பலமாகும்

(வவுனியா)

வவுனியா தபாலக வளவில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட வெளிநாட்டுத் தபால்கள், பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு, உள்நாட்டு தபால்கள் சம்பந்தமான மோசடி பற்றிய விசாரணைகள் முடிவடையும் கட்டத்திலிருப்பதாக அறியப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து மன்னுர் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட தபால்கள் எவ்வாறு வவுனியா தபாலகக் கிணற்றுக்குள் போயிருக்கக்கூடும் என்பது குறித்தும், அந்தச் சூத்திரதாரிகள் யார் என்பது பற்றியும் பூரணமாக விசாரணை நடைபெற்று வருகிறது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சி. க. சபாபதி**

(முன்னுள் தலைவர் கொக்குவில் கிராமசபை)

அன்பின் திருவுருவே! ஆற்றல்நிறைந்தவரே! பாசத்தின் பிறப்பிடமே! எமது இல்லத்தின் திருவிளக்காய் அமைந்து அனைவருக்கும் நல்வழிகாட்டியாக ஒளிவிளக்காய்ப் பிரகாசித்ததந்தையே, எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும் எப்போதும் எம்மனதைவிட்டு அகலாமல் இருக்கின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லோரும் ஒன்றிணைந்து இறைவனை வேண்டுகிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமகன்மார், மருமக்கள்மார், மச்சான், மச்சாள்மார், பேரப்பிள்ளைகள்.

(சி 3784)

# பண்டத்தரிப்பு வர்த்தகர்கள் தீர்மானம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து பெரிய தடித்த எழுத்துகளில் பெயர்ப்பலகைகளை வெளியிடுவது என்று அண்மையில் நடைபெற்ற பண்டத்தரிப்பு பகுதி வர்த்தகர்களின் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் இயக்க மக்கள் முன்னணியின் பண்டத்தரிப்பு பிரதேசபொறுப்பாளர்: கடைகள், வர்த்தக நிலையங்கள்ஆகியவற்றின் பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழிக்கு வழங்கப்படவேண்டிய முக்கியத்துவம் குறித்து விபரமாக தெரிவித்தார்.

பேக்கறி உரிமையாளர்கள் தாங்கள் தயாரிக்கும் பாணின்

(7-ம் பக்கம் பார்க்க)

நாவற்குழி ஈழநாடு முகவராக
"சதீஸ் ஸ்ரோர்ஸ்"
நாவற்குழி சந்தி, கைதடி.
நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை
அறியத்தருகின்றேம்.
ஈழநாடு லிமிட்டெட்.
(எ-706)

சங்கானை வடிசாலை கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. பொதுமுகாமையாளர்:-
வயதெல்லை:- 18–45 வருடங்கள்.
தகைமைகள்;- (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானப் பரீட்சையில் சித்தியடைந்தவர்.
(ஆ) இத்துறையில் தொழில் நுட்ப அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம்;- திறமைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், சங்கானைவடிசாலை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சங்கானை என்றமுகவரிக்கு 30-4-1990க்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்.
சங்கானை வடிசாலை சமாசம்.
12-04-90 (சி-3750)

★ லிதுவேனியா மீதான

# பொருளாதாரத் தடையை உடன் நீக்குமாறு

# ஐரோப்பிய சமூக நாடுகள் கோரிக்கை

## வெளிநாட்டுத் தலையீட்டிற்கு சோவியத் கண்டனம்

[டுபிளின்]

சோவியத் யூனியன் 'லிதுவேனியா' குடியரசு மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளதை ஐரோப்பிய சமூகம் கண்டித்துள்ளதுடன் இத்தடையை தளர்த்துமாறும் அதிபர் திரு. கொர்ப்பச்சேவை கோரியுள்ளது. எனினும் சோவியத் அரசு இது தொடர்பாக கருத்து எதனையும் வெளியிடவில்லை.

லிதுவேனியா, சுதந்திர குடியரசாக சோவியத் யூனியனின் அனுமதியின்றி பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து விடுக்கப்பட்ட பல எச்சரிக்கைகளையும் அது மீறி வந்ததையடுத்தே மேற்படி பொருளாதாரத்தை விடதிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக சோவியத் அரசும், லிதுவேனிய குடியரசும் தமது நிலைகளை விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை. மேற்படி பொருளாதாரத் தடையால் பலலட்சம் பொது மக்கள் பாதிக்கப்படுவதாகவும் இதனை உடனடியாக தளர்த்துமாறும் 'ஐரோப்பிய சமூக நாடுகள் நேற்று முன்தினம் சோவியத் யூனியனை கோரியுள்ளன.

லிதுவேனியா தனது கடின போக்கை கைவிடத் தவறும் பட்சத்தில் தடை நடவடிக்கை காலவரையறையின்றி தொடர்ந்தும் அமுலிலிருக்குமென்றும் இவ் விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீட்டை சோவியத் யூனியன் அனுமதியாதென்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## சதிமுயற்சிதோல்வி

[லாகோஸ்]

நைஜீரிய ஜனாதிபதியின் ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க எதிர்ப்பாளர் விரட்டியடிக்கப் பட்டுள்ளதாகவும், மறுஅறிவித்தல் வரும் வரை மக்கள் அமைதியாக இருக்கும்படியும், ஜனாதிபதி இப்ருகீம் பாபன்கிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## ஜம்மு - தீவிரவாதிகளுக்கு ஆப்கான் கெரில்லாக்கள் பயிற்சி

### அரசு எச்சரிக்கை

(காபூல்)

இந்தியாவில் பிரிவினை கோரி போராடிவரும் ஜம்மு—காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு ஆப்கான் கெரில்லாக்கள் போர்ப்பயிற்சி அளித்து வருவதாக ஆப்கான் அரசு குற்றம் சாட்டியுள்ளது. இதுபற்றி ஆப்கான் அரசு இந்தியாவுடன் தொடர்புகொண்டுள்ளது.

பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் தற்போது ஜம்மு தீவிரவாதிகளுக்குப் பயிற்சி நடைபெறுவதாகவும் அமெரிக்கா வழங்கும் இராணுவ உதவிகளைப் பெற்று ஆப்கான் கொரில்லாக்கள் தீவிரவாதிகளுக்கு சகலவிதங்களிலும் உதவி வருவதாகவும் ஆப்கான் வெளிவிவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதற்காக பாகிஸ்தானும் ஆப்கான் கொரில்லாக்களுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இதுபற்றி இந்தியாவுக்கு ஆப்கான் எச்சரித்துள்ளது. மேலும் இதனைத் தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் ஆப்கானிஸ்தான் இந்தியாவுக்கு பூரண ஆதரவை வழங்கி வருவதும் குறிப்பி—த்தக்கது. (சி)

## பாப்பரசர் கூட்டும் மாநாடு

(வத்திக்கான்)

ஐரோப்பாவில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள ஜனநாயப் புரட்சி பற்றி ஆராய்வதற்கு பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அதிமேற்றிறிராணியார் மாநாடு ஒன்றை கூட்டவுள்ளார். (அ)

## சரணடைந்தனர்

(கொழும்பு)

தாமாகவே முன்வந்து சரணடைவோர் சுயாதீனகுழு இயங்கத்தொடங்கிய முதல் நாள் அன்றே ஒன்பது பேர் சரண் அடைந்தள்ளனர்.

இரண்டு பேர் வவுனியாவிலும், ஆறு பேர் மாத்தளையிலும், ஒருவர் ஹம்பாந்தோட்டையிலும் சரணடைந்துள்ளனர். (அ)

## பிரிட்டிஷ் பிரதமருக்கு செல்வாக்குகுறைவு

(லண்டன்)

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் பிரித்தானியாவில் பதவி வகித்த பிரதமர்களில் மிகவும் செல்வாக்கிழந்த பிரதமராக மார்க்கிரட் தட்சர் கணிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இங்கிலாந்தில் எடுக்கப்பட்ட கருத்து வாக்கெடுப்பின் மூலமே பிரதமர் மார்க்கிரட் தட்சர் இவ்வாறு கருதப்படுகிறார். (அ)

## 'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம்கொடுத்தவர்'

### லெனின் நினைவுக்கூட்டத்தில் கருத்து

(யாழ்ப்பாணம்)

''உலகின் முதல் தொழிலாள அரசை நிர்மாணித்த மாபெரும் சிற்பி லெனினுவார். லெனின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்து தேசத்தின் ஐக்கியத்தையும், பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையையும் வலியுறுத்திவந்தார்.''

யாழ்-பலாலி வீதியில் உள்ள பொன். குமாரசாமி நூலக மண்டபத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவில் நடாத்தப்பட்ட லெனின் நினைவுதினக் கூட்டத்தில் திரு. எஸ். குகதாஸ் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''சுயநிர்ணய உரிமையை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுள்ளது. லெனின் ஒரு சிறந்த சமூக விஞ்ஞானி. எல்லாவிதமான பிரச்சனைகளுக்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், தீர்வையும் முன்வைத்தார்'' என்றும் அவர் கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு. அற்புதரத்தினம் பேசுகையில்; ''லெனின், சமாதான சகவாழ்வுக் கொள்கையைக்கடைப்பிடித்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வலியுறுத்திய லெனின் ஒரு சிறந்த ஜனநாயகவாதியாகவும் திகழ்ந்தார்'' என்றார்.

எழுத்தாளர் டொமினிக் ஜீவா, மற்றும் திருவாளர்கள் சிவராசா, குமரன் ஆகியோரும் பேசினர். (152)

## பங்களாதேஷில்கடும் சூறுவளி நூறு பேர் வரை பலி

### அகதிகளாக லட்சக் கணக்கானோர்

[டாக்கா]

பங்களாதேஷில் கடந்த மூன்று நாட்களாக வீசிவரும் பெரும் சூறுவளியினால் சுமார் 80 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளதுடன் லட்சக்கான மக்கள் வீடுகளை இழந்து அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

பங்களாதேஷின் வடக்குப் பகுதியை இந்த சூறுவளி கடுமையாக தாக்கி சேதம் விளைவித்துள்ளது பல கிராமங்கள் இச்சூறுவளியில் சிக்கியதாலும் ஆறுகள்பெருக்கெடுத்ததாலும் பலியானவர்களில் பெரும்பாலோரது சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை.

இப்பகுதியில் தொடர்ந்தும் 'சூறுவளி' வீசுவதால் மீட்பு நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு பணியொன்றின் போது சுமார் நூறு மாடுகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அகதிகள்முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் 'ஹெலி' மூலம் போடப்படுவதாகவும். எனினும் பெரும் பாலான இடங்களுக்கு கொண்டுசெல்ல போதிய வசதிகள் இல்லாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## நியமனம்

(புலோலி)

உடுத்துறை கொத்தணிப் பாடசாலையின் பிரதி அதிபராக மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுத்துறை கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. வி. இராசலிங்கம் வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டதையடுத்தே மேற்படி புதிய நியமனம் வழங்கப்பட்டது. (61)

## மீண்டும் யுத்தம் வெடிக்குமா?

# இந்திய - பாக். எல்லையில் சண்டை இரு தரப்பிலும் 20 வீரர்கள் பலி!

### எல்லைகளில் 40,000 வீரர்கள் தயார் நிலையில்

(புதுடில்லி)

இந்திய—பாகிஸ்தான் எல்லையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருதரப்பிலும் சுமார் 20 படையினர் கொல்லப்பட்டதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது. தற்போது இவ் எல்லைப் புறங்களில் தொடர்ந்தும் துப்பாக்கிச் சூட்டு சத்தங்களை கேட்கமுடிவதாகவும் அச்செய்தி தெரிவிக்கிறது.

இந்தியா - பாகிஸ்தானை பிரிக்கும் காஷ்மீர் எல்லைப் புறத்திலேயே இச்சண்டை இடம்பெற்றுள்ளது தயார் நிலையில் இருக்கும் துருப்புகள் எல்லைகளில் காணப்படும் நடமாட்டங்களையடுத்து சண்டையில் ஈடுபடுவதாக தெரியவருகிறது.

மேற்படி சண்டையில் இரு தரப்பிலும் 20வீரர்கள் கொல்லப்பட்ட போதும் இதனை பெரிதுபடுத்த இருநாடுகளும விரும்பவில்லை. இதனை வழமையான ஒரு செயலாகவே இரு நாடுகளும் அறிவித்துள்ளன.

தற்போது இந்திய பாகிஸ்தான் எல்லை முழுவதிலுமாக இருநாடுகளும் சுமார் 40,000 வீரர்களை எந்நிலையையும் சமாளிக்கும் விதத்தில் நிறுத்தியுள்ளன. நவீன போர்த்தளபாடங்களும் போர்கருவிகளும் இவ்எல்லைப் புறங்களில் குவிக்கப்பட்டு வருகின்றன.

இச்சிறுசிறு சண்டைகள் இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் பெரும் முறுகல் நிலையை நான்காவது பெரிய யுத்தமாக மாற்றலாமென்றும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

### மணிவாக்கு

''புலனடக்கம் மனிதனின் வாழ்க்கை விதி. மிகச் சிறந்த வழியில் புலனடக்கம் இல்லாமல் எவரும் முழுமையை அடைதல் முடியாது''.

— மகாத்மா காந்தி

## நமது நோக்கு

# ஒரே வானம் - ஒரே பூமி! அதற்கு வருகிறது கேடு!

''எல்லோருக்கும் தேவையானது பூமியிலுண்டு; ஆனால் எல்லோருடைய பேராசைக்கும் போதுமானவை பூமியில் இல்லை!''—இப்படிக் கூறி மனிதனைச் சிந்திக்க வைத்தவர் மகாத்மா காந்தி.

ஒரே பூமிதான்; ஆனால் இப்பூமியிற் பல நாடுகள்; பல சமூகங்கள்; சில வல்லரசுகள; பல வறிய நாடுகள்.

நாடுகளும் சமூகங்களும் தமது நன்மையை மாத்திரம் மனத்திருத்தி, பொதுவான பூமியைச் 'சுரண்டி' வருவதால், பூமி சீரழிந்து வருகின்றது; இயற்கை சீற்றம் காட்டி வருகின்றது.

இயற்கை தரும் நன்மைகளை, மண்ணின் வளத்தினை, வரையறையின்றி 'அள்ளலாமா?' அடுத்துவரும் சந்ததி பற்றிச் சிந்தனை வேண்டாமா? ஒரு சில நாடுகளின் கைத்தொழில் மயம், முழுப்பூமியின் மாசடைதலுக்கு வழி வகுக்கலாமா?

இவை பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்பே சில அறிஞர்களால், விஞ்ஞானிகளால் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனால், மனிதன் தன் மனப்போக்கை மாற்றினானா?

இன்று நாம் காண்பதென்ன? மலைகளில் மரங்கள் வெட்டப்பட்டன; மலை வளம் குன்றி வருகின்றது. காடுகள் அழிக்கப்பகிகுன்றன; மழை வளம் குன்றிவருகின்றது; மண்ணரிப்புப் பெருகி வருகின்றது.

தொழிற்சாலைகள், வாகனங்கள் வெளிவிடும் நச்சு வாயுக்கள், கழிவுகள் சூழலை மாசுபடுத்தி வருகின்றன.

மண்ணில் மாத்திரமா இந்தக்கேடு? கடலின் வளமும் அருகி வருகின்றது. மண்ணின் கழிவுப்பொருட்களைக் கடலிற் கொட்டிவிட்டாற் பாதகமில்லை என்ற நினைப்பு, கடலுக்கே ஆபத்தை விளைத்துவருகின்றது.

இன்று பல நாடுகளிலும், பல மட்டங்களிலும், சூழல் மாசடைதல் பற்றிய விழிப்புணர்ச்சி வேகமாகப் பரவி வருகின்றது. விளைவுகள் பற்றிய சிந்தனை பலருக்கு ஏற்பட்டு வருகின்றது.

மேற்கு நாடுகளில், ''கிறீன்பீஸ்'' என்ற இயக்கத்தின் தீவிர நடவடிக்கைகள், பலரது கவனத்தையும் கவர்ந்து வருகின்றன.

அரசாங்கங்கள் உஷாரடைந்து வருகின்றன. சர்வதேச மகாநாடுகள் நடாத்தப்படுகின்றன.

வெறும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை இழக்கச் செய்யலாமா?

மக்கள் தலையிற் கையை வைத்துக்கொண்டு வாளாவிருக்கலாமா?

மாசடைதலைத் தடுக்கப் பல சட்டங்கள் உருவாகின்றன. சூழற்பாதுகாப்பு அமைச்சர்கள் முக்கிய இடம் பெற்று வருகிறார்கள்.

சகல சமூகங்களும் மண்ணின் மாசடைதலைத் தடுக்கக் கூட்டு முயற்சியோடு செயற்பட வேண்டும்.

மண்ணின் தினம் கொண்டாடப்பட்டது; விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. அரச செயல்திட்டங்கள் விரைவாக அமுலாகி, பூமி காப்பாற்றப்படுமென நம்புவோமாக!

# கொள்கைத் திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் மாகாண சபைகளின் நிர்வாக அதிகாரங்களையும், செயற்றிட்ட முறைகளையும் மாற்றியமைக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பிரத்தியேக அறிவுறுத்தலுக்கிணங்க இக்கொள்கைத் திட்டத்தைத் தீவிரமாகச் செயற்படுத்த மாகாண சபைகள் உள்நாட்டு அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார்.

இது சம்பந்தமான உயர் மட்ட, மாகாண சபை முதலமைச்சர்கள், அரசாங்க அதிபர்கள், செயலாளர்களை உள்ளடக்கிய விசேட மகாநாடு நடாத்தப்பட்டு, விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியினால் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு மாகாணசபை முறை பயன்படுத்தப்படல் வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

### ஆலய முன்றலில் 2நாள் உண்ணாவிரதம்

(கிளிநெச்சி)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் சமாதானம், அமைதி, தமிழரின் சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்று கோரி கிளிநொச்சி நகர் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி சிற்றூர் அவை உறுப்பினர் திரு. தர்மசேனன் இருநாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தார். (83)

## மக்கள் கருத்து

### அகற்றப்படுமா?

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தைச் சுற்றியுள்ள பாதைகளில் யாழ். மாநகர சபையினரால் சிறிய புல்டோசர் இயந்திரம்மூலம் குவிக்கப்பட்ட மண்குவியல்களும் குப்பைகளும் அப்படியே காணப்படுகின்றன.

கடந்த ஒரு மாதமாக அந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இவற்றை அகற்றுவதற்கு யாழ். மாநகரசபையினர் முன்வருவார்களா?

எஸ். செல்வராஜா,
வேம்படி வீதி,
யாழ்நகர்.

## இராசி பலன்

24-04- 1990

செவ்வாய்க்கிழமை

மேடம்: ஜனவசிகரம், பிடிவாதம், தொழில் மந்தம், குடும்ப சுகம், சமாதானம்.

இடபம்: மறதி, உழைப்பு, அலைச்சல், ஆடம்பரம், வைத்தியம், உடல் உபாதை.

மிதுனம்: மனச்சஞ்சலம், பயம், மறதி, உழைப்பு, காரியததடை, பணவரவு.

கடகம்: உபாதை, நல்ல முயற்சி, யோசனை, பணக்கஷ்டம், தந்திரம்.

(5ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### போஸ் திருமணமா?

'ஏசியா வீக்' என்ற சஞ்சிகையில், கிழக்கு நாடுகளில் திருமணத்திற்குச் செய்யும் ஆடம்பரச்செலவுபற்றிபலர் கண்டித்து கடிதங்கள் எழுதியுள்ளார்கள்.

நமது பகுதியின் சில திருமணங்கள் மிகஆடம்பரமாக நடைபெறுகின்றன. பந்தல்கள், சோடனைகள், விருந்துகள் கேளிக்கைகள் இப்படிப் பல வீம்புச் செலவுகள் இவை அவசியம்தானா?

கேட்டால் கிடைக்கும் பதில்.........?

வெளிநாட்டு சகோதரங்களுக்கு வீடியோ கசெட் அனுப்பவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு ஆடம்பரங்கள்......அவர்கள் இதற்காக தனியாகப்பணம் அனுப்பியிருக்கிறார்கள்......!

வீடியோக்காரரும் படம் எடுப்பவர்களும் இடும் கட்டளைகள்தான் எத்தனை? ''முகத்தைத் திருப்பு; மேலதிக மாலையைக் கழட்டு; அரசாணி மாலை மறைக்குது, கழட்டி விடு; தாலிகட்டுவதைத் தாமதி; இங்கே பார் தாலிகட்டுவதுபோலப் 'போஸ்' கொடு!'' இப்படிப் பல.

இதனாற் சுபமுகூர்த்தத்தில் தாலி ஏறுகிறதா? தாலி கட்டும்போதே தடைகள், தாமதங்கள்!

'போஸ்' கொடுப்பதிலேயே கவனம் சென்றால் திருமணம் என்ற புனிதச் சடங்கு சீராக நடக்குமா?

வாணி

## மாணவர் மலர்ச்சிக்காக

சமூகக்கல்வி

★ மலைகள் இருப்பதால் எமக்கு ஏற்படும் நன்மைகள் எவை?

1. நாட்டின் பாதுகாப்பு அரண்களாக இருக்கும்.
2. உல்லாசப் பயணத்துறை விருத்தியடையும்.
3. வெப்பநிலை குறையும்.
4. மலைத்தடை மூலம் மழைவீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்தும்.
5. தேயிலை இறப்பர்போன்ற பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு உதவும்.

★ மலைகள் இருப்பதால் ஏற்படும் தீமைகள் எவை?

1. போக்குவரத்து தடைப்படும்.
2. வதிவிடப்பிரச்னை ஏற்படும்.

★ காடுகளை அழிப்பதால் ஏற்படும் தீமைகள் யாது?

1. மரங்களின் இனப்பெருக்கத்திற்கு இன்றியமையாத விதைகள் அழிந்துபோகின்றன.
2. நிலம் மண்ணரிப்பிற்கு உள்ளாகும்.
3. நிலம் அதிக சூரியவெப்பத்திற்கு உள்ளாகின்றது
4. வெள்ளப் பெருக்கை குறைக்க முடியாமல் போகின்றது.
5. மழைவீழ்ச்சி குறைகின்றது.
6. தரைக்கீழ் நீர்வளம் வறட்சியடைகிறது.
7. வளி மாசடைகிறது.
8. வன விலங்குகளுக்குப் புகலிடம் அற்றுபோகின்றது.
9. மூலிகைகள் (மருந்து செடி கொடிகள்) அழிகின்றன.
10. சேதனப் பொருட்கள் அழிவதால் மண்வளம் குன்றுகின்றது.
11. சூழலின் சமநிலை குழப்பப்படுகின்றது.

★ பௌதிக சூழல் மேலோங்குதல் என்றால் என்ன

1. மனிதன் வாழமுடியாமல்: பனிப்படலம் நிரந்தரமாக உறைந்திருத்தல்.
2. பாலை நிலங்களாக இருத்தல்.
3. மலைப்பிரதேசங்களாக இருத்தல்.
4. மழைவீழ்ச்சி அதிகமாகவுள்ள சதுப்பு நிலங்களாக இருத்தல்.

தொகுப்பு: க. சந்திரசேகரம்
நாவற்குழி, ம. வி.

சுகாதாரம்

# தோலும் அதன் தொழில்களும்

நமது தோலில் ஒரு துண்டை குறுக்காக வெட்டி, அதன் வெட்டு முகத்தை நுணுக்குக் காட்டியில் பார்ப்பதன் மூலம் தோலின்தோற்றத்தை நாம் அறிந்துகொள்ளலாம். தோலில் மேல் தோல் என்றும் அடித்தோல் என்றும் இரண்டு அடுக்குகள் காணப்படுகின்றன.மேற்றோலில் பல நுண்ணிய துவாரங்கள் இருக்கின்றன. இவற்றின் வழியாகவே வியர்வை வெளிவருகின்றது. மேல் தோலில் இரத்தக்குழாய்களோ, நரம்புகளோ இல்லை. ஆனால் அடித்தோலில் இரத்தக் குழாய்களும், நரம்புகளும், வியர்வைச் சுரப்பிகளும் உள்ளன. வியர்வைச் சுரப்பிகள் சிவப்பு நிறமுள்ள சுருள்களாகக் காணப்படும். இவற்றைச் சூழ்ந்து மெல்லிய இரத்தக் குழாய்கள் பரவியுள்ளன. ஒவ்வொரு சுரப்பியிலிருக்கும் ஒவ்வொரு வியர்வை நாளம் மேல் தோலில் இருக்கும் ஒவ்வொரு துவாரத்தோடும் இணைக்கப்பட்டிருக்கின்றது. தவிர, அடித்தோலில் எண்ணெய் சுரப்பிகளும் இருக்கின்றன. இவற்றிலிருந்து எண்ணெய்ப் பசையுள்ள ஒரு பொருள் உண்டாகித் தோலையும் உரோமத்தையும் மிருதுவாக்கச்கின்றது.

### தோலின் தொழில்கள்

1. தோல் தேகத்தை மூடிக்கொண்டு உள்ளிருக்கும் பாகங்களைப் பாதுகாக்கும் மேற்கவசமாக உள்ளது.
2. வியர்வைச் சுரப்பிகளிலிருந்தே வியர்வை வெளியாகின்றது. அது இரத்தத்திலிருந்து நீர், சில தாதுப் பொருட்கள், காபனீர் ஒட்சைட்டு, சிறுநீர் உப்புக்கள் ஆகிய கழிப்பொருட்களை வியர்வையாகப் பிரித்தெடுக்கின்றது. ஆகையால் தேகத்தில் ஏற்படும் சில கழிவுப்பொருட்களை வியர்வையாக வெளிவிடும் ஒரு கழிவு உறுப்பாகத் தோலானது தொழிற்படுகின்றது.
3. ஒரு பொருளைத் தொட்டுப்பார்த்து அது சூடாக இருக்கின்றது அல்லது குளிராக இருக்கின்றது என்றும் மிருதுவாக உள்ளது அல்லது கடினமாக உள்ளது என்றும் நாம் தெரிந்துகொள்ள உதவுவன அடித்தோலிலுள்ள நரம்பு அணுக்கள். எனவே தொடும் உணர்ச்சியை தெரிவிக்கும் ஓர் உணர்ச்சிக் கருவியாகத் தோல் தொழிற்படுகின்றது.
4. வெய்யிற் காலத்திலும், அதிக வேலைசெய்யும் போதும் தோலிலுள்ள இரத்தக் குழாய்கள் விரிந்து அவற்றில் அதிகம் இரத்தம் செல்லும். அதனால் அதிக வியர்வை உண்டாகி வெளிவரும். அந்த வியர்வை தேகத்திலுள்ள வெப்பத்தை எடுத்துக்கொண்டு ஆவியாகப்போகும். அதனால் தேகத்தின் வெப்பம் அதிகமாகாது குளிர்காலத்தில் தோலிலுள்ள இரத்தக்குழாய்கள் சுருங்க, அதிக இரத்தம் அவற்றின் மூலமாகச் செல்லாது. அதனால் அதிக வியர்வை வெளிவராது. தேகத்திலிருந்து வெப்பமும் வெளிச்செல்லாது. ஆகையால் வெய்யிற் காலத்திலும், குளிர் காலத்திலும், வேலை செய்யும் போதும் நம்முடைய தேக வெப்பம் ஒரே சீராய் அதாவது 980 Fஇல் எப்போதும் இருக்கும்.

செல்வி சாந்தினி கந்தசாமி
பண்டத்தரிப்பு.

# பாராட்டுக் கூட்டம் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது!

(புத்தளம்)

இலங்கையிலிருந்த இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை மூடியமைக்கு ஜனதிபதி திரு ஆர். பிரேமதாசாவைப் பாராட்டும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் இடையில் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக மாறிய சம்பவம் புத்தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்துள்ளது.

3000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டச்தில் பலர் திடீரென ''காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கு'' இந்தியாவே காஷ்மீரினைக் கைவிட்டு விடு'' என்ற கோஷங்களை எழுப்பி கூட்டத்தையே பெரும் சலசலப்புக்குள்ளாக்கி விட்டனர்.

காவலுக்கு நின்ற பொலிஸார் மக்களை கட்டுப்படுத்தி கூட்டத்தை அமைதியாக நடாத்த பெரும் பாடுபட வேண்டியதாயிற்று. ஆயினும் கூட்டம் அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் அமைதியாக நடந்து முடிந்தது என்று புத்தள உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் டபிள்யூ ரி. தயாரத்ன தகவல் தெரிவித்துள்ளார் (அ)

# இப்படியும் நடக்கிறது

கடந்த ஆண்டு நாட்டின் இக்கட்டான நிலையில் ரூபவாஹினி, வானெலி ஊழியர்கள் நிலைமை பற்றி இப் பத்தியில் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்!

தெற்கில் தொடர்ச்சியாக ஏற்பட்ட பீதி காரணமாக 'அவர்கள்' நிற்க 'இவர்கள்' கடமைக்குப் போனமை பற்றி எழுதியிருந்ததும் வாசகர்கள் அறிவார்கள்.

ரூபவாஹினியின் தலைவர், பணிப்பாளர் நாயகம் இருவரும் தலைமறைவாக நிதிச்குப் பொறுப்பான நம்மவர் ஒருவர் தலைகொடுத்து ஆபத்தில் உதவியதை, நாட்டின் அதிமேலிடம் நன்றியுடன் மறக்கவில்லைப் போலும்!

அந்த நன்றிக்குப் பரிசு......?

விமானப்படை அதிகாரி ஒருவரின் 'தகுதிவாய்ந்த அதிகாரத்தின்'கீழ் இயங்கும் கூட்டுத்தாபனம், விரைவில் பணிப்பாளர் சபையின்கீழ்மீளவரப்போகிறதாம். தமிழர் ஒருவர் முதலாவதாகப் பெறும் 'பணிப்பாளர் நாயகம்' என்ற பதவி அன்று தலைகொடுத்த 'சற்குணமான' நம்மவருக்குத்தான் வழங்கப்படப் போகிறதாம்!

'ஊடுருவி'

# களைகட்டிய முல்லை மாவட்டம்

[ஒட்டுசுட்டான்]

அன்னை பூபதி கணபதிப் பிள்ளை நினைவுநாளையொட்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்பானமுறையில் எழுச்சி விழா நடைபெற்றது.

முல்லை கலை கலாசாரப் பேரவை, தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, அன்னையர் முன்னணி, மாணவ பேரவைகள் ஒருமித்து ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற எழுச்சிவிழாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

முல்லை நகரில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் சுழற்சிமுறை உண்ணுநோன்பு காலையில் ஆரம்பமாகி மாலையில் நிறைவுபெற்றது.

உண்ணுவிரதத்தில் கலந்து கொள்வதற்கு நகருக்கு பல கிராமங்களிலிருந்தும் மக்சள் வந்திருந்தனர்.

பிற்பகல் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் பொது ஸ்தாபனப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான். நெடுங்கேணி ஆகிய இடங்களிலும் மாபெரும் ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்றன.

இப்பகுதிகளில் இரவு முழுவதும் பல இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறறன. (144)

# முத்துஐயன்கட்டில் எழுச்சி விழா

(ஒட்டுசுட்டான்)

தமிழரின் சுதந்திரத்திற்காக உண்ணு நோன்பிருந்து மரணத்தைத் தழுவிய அன்னை பூபதிக்கு ஒருமாத காலம் அளிக்கப்பட்ட அஞ்சலியின் இறுதிநாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற எழுச்சி விழா முத்துஐயன்கட்டுப் பிரதேசத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது

எழுச்சி விழாவில் பலஇடங்களிலிருந்தும் மக்கள் அணி அணியாக வந்து கலந்து கொண்டனர்.

விழா, சிற்றூர் அவைத்தலைவர் மாயவன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் ஒட்டுசுட்டான் பிரதேச வி. பு. ம. முன்னணியின் வட்டார இணைப்பாளர் திரு. வேணு சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டார். மற்றும் கைலாஸ், பாலு உட்பட பொதுஸ்தாபனப் பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர், (144)

# செல்வாநகர் மக்கள் சத்தியாக்கிரகம்

[நமது கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி செல்வா நகரில், பொதுமக்கள் பாவனையில் பல வருடங்களாக இருந்து வந்த ஒரு வீதியை மூடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டித்தும், இவ்வீதியை ஆரம்பத்தில் திறந்துவைத்த முன்னுள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சிதம்பரப்பிள்ளைக்கு எதிராக, வீதி அமைந்துள்ள காணியின் உரிமை கோருபவர் எடுத்துள்ள சட்ட நடவடிக்கையை ஆட்சேபித்தும் செல்வா நகர் மக்கள் பெரும் தொகையாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். மாலை வரை இப்போராட்டம் நீடித்தது குறிப்பிடத்தக்கது. (83)

# 'யாழ்.சம்பவங்களைகண்டுதிகைத்த நான் மக்களின்மனேதிடம்கண்டுமகிழ்கிறேன்

## யாழ். வந்த ஐ. நா. அபிவிருத்தி அதிகாரி கருத்து

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணத்தில் பல அட்டூழியங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல சம்பவங்களைக் கேட்டறிந்து திகைத்துப் போனேன். மக்களின் மனம் புண்பட்டிருப்பதைக் கண்டு வேதனையடைகிறேன்.''

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிரந்தரப் பிரதிநிதி திரு. றெபேர்ட் லண்டன் யாழ். கல்வித் திணைக்களத்தில்நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி கருத்தை வெளியிட்டார். இக்கலந்துரையாடலுக்கு யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. றெபேட் லண்டன் மேலும் தெரிவித்ததாவது:-

''யாழ்ப்பாணத்துக்கு இப்பொழுதுதான் முதல் தடவையாக வந்துள்ளேன். கடந்த காலங்களில் இங்கு நடைபெற்ற சம்பவங்களை, அனர்த்தங்களை நேரில் காணும் வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. எத்தனையோ கட்டிடங்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. இதைத்திருத்தி அமைப்பதற்கு ஐந்தாறு வருடங்கள்கூடச் செல்லக்கூடும். இத்தனைக்கும் மத்தியில் உங்களது மனேதிடத்தையும், உற்சாகத்தையும் கண்டுபெருமிதமடைகின்றேன். உங்களுக்கு முறைசாராக் கல்வி மூலம் விமோசனம் கிடைக்கும். கல்வி, வேலையில்லாத் திண்டாட்டம் எல்லாம் முற்றுப்பெறும். என்னுலான உதவிகளை இம்மக்களுக்குச் செய்வேன்'' என்று கூறினர். [152]

## இராசி பலன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம்: குடும்பக்குழப்பம், உதவிகள், உல்லாசம், கடிதத் தொல்லை.

கன்னி: கடன்பயம், வீண் விரயம், தேகசுகம், மனேதிடம், பந்துவரவு.

துலாம்: அரசியல் பேச்சு, உயர்ச்சி, வைத்தியம், ஆலய தரிசனம்.

விருச்சிகம்: அலைச்சல், அற்பர் நேசம், தாய்வழியினா வருகை, மனச்சோர்வு.

தனுசு: தொழில் சிறப்பு. கடினவாக்கு, சாஸ்திர விருப்பு, மேலிட உதவி.

மகரம்: பணவரவு, இனசன உதவி, காரியத்தடை, புண்ணியச்செலவு.

கும்பம்: வாக்குச் சிறப்பு, சுபகாரியங்கள், உழைப்பு, நீசர் நட்பு, வசீகரம்.

மீனம்: அமைதியின்மை, கௌரவம், கடினச்சொல், இடாம்பீகம்.

இ. மகாதேவா

# சுங்கப்பகுதிகள் சுறுசுறுப்படைகிறது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சுங்கப் பகுதி மீண்டும் கடந்த 20ந் திகதி தொடக்கம் காரைநகர் துறைமுகத்திற்கு அருகில் இயங்கத் தொடங்கியுள்ளது. சுங்கப் பரிசோதகர் திரு. கே. துரைசாமி தலைமையில் இந்த அலுவலகம் இயங்குகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் விசேட தடுப்புப் பகுதியும் இயங்கத் தொடங்கி விட்டது. சட்டவிரோதக் கடத்தல் சம்பந்தமான வழக்குகளை இந்தப்பகுதி விசாரணை செய்கின்றது. சுங்க அத்தியட்சகர் திரு. கே. இராசரத்தினம் தலைமையில் இவ்வலுவலகம் இயங்குகிறது.

காங்கேசன்துறையில் இறக்குமதி, ஏற்றுமதிப்பகுதி தொடர்ந்தும் இயங்குகிறது. உதவி சுங்க அத்தியட்சகர் திரு. சி. சண்முகநாதன் தலைமையில் இவ்வலுவலகம் இயங்குகிறது.

முல்லைத்தீவு சுங்க இலாகாவும் கடந்த 20ம் திகதிமுதல் மீண்டும் இயங்கத்தொடங்கி விட்டது. சுங்கப் பரிசோதகர் திரு. வி. சரவணமுத்து தலைமையில் இவ்வலுவலகம் இயங்குகிறது.

மன்னர், பேசாலை, தலைமன்னர் ஆகிய அலுவலகங்கள் ஒன்றிணைக்கப்பட்டு விசேட சுங்கத் தடுப்புப்பகுதி தலைமன்னர் துறையில் இயங்குகிறது. உதவிசுங்க அத்தியட்சகர் ஜனுப் முகம்மதுஜமால் தலைமையில் மூன்று பரிசோதகர்களும் நான்கு காவலர்களும இவ்வலுவலகத்தில் கடமையாற்றுகிறர்கள்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள அலுவலகக் கட்டிடங்கள் முற்ருக சேதமடைந்த காரணத்தால் வாடகைக்கு வீடுகளைத் தேடி சுங்கப்பகுதியினர் அலைகின்றனர். வாடகை கட்டிடங்கள் கிடைத்தவுடன் சுங்க இலாகா இரண்டு இடங்களிலும் இயங்கத் தொடங்கும்.

ஆனையிறவு சுங்கப்பகுதிக்கு கட்டிட வசதி இன்மையால் மாற்று ஒழுங்குகள் எடுக்கும் வரையில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தலின்பேரில் அங்கு இயங்கும் பொலிஸார் சட்டவிரோதக் கடத்தல் தடுப்பு வேலைகளில் தீவிரமாக இயங்கும்படி பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (153)

# "பாவனையாளர் நம்பிக்கை இழக்கக்கூடாது"

[யாழ்ப்பாணம்]

''எமதுதொழில் சீரிய சட்ட திட்டங்களுக்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு, காலங் கடந்த மருந்து விநியோகங்களை உடன் நிறுத்த வேண்டும்'' என்று நேற்று முன்தினம் சுபாஸ் விடுதியில் நடைபெற்ற யாழ். மருந்துவிற்பனையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து சங்கச் செயலாளர் திரு. சிவஞானம் ஸ்ரீ கணேசன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''எமது சங்கத்தின் அங்கத்துவ மருந்துக்கடைகள், பிரதானமாக பாவனையாளர்களின் நம்பிக்கையை இழக்குமளவிற்கு விற்பனை நடத்தக்கூடாது. எமது சங்கம் ஏனைய வர்த்தக சங்கங்களுக்கு ஒரு முன்னேடியாக உண்மையுடன் இயங்கவேண்டும்'' என்றும் அவர் கூறினர்.

கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உணவு மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு, த. மகாதேவனும் உரையாற்றினர். (56)

# வருடாந்த கலைவிழா

(பருத்தித்துறை)

தலவாக்கலைசென். பற்றிக்ஸ் கல்லூரி வருடாந்த கலைவிழா யூன் மாதம் 9ம், 10ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர்அருட் சகோதரி எம். யூலியா தலைமையில் நடைபெறும் இவ்விழாவிலே பிரதம விருந்தினராக கண்டி ஆயர் அதிவணக்கத்திற்குரிய பெர்ணண்டோ கலந்துகொள்கிறர். (52)

# அலுவலகம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சபை தனது அலுவல்களை வவுனியா நகரசபை நூலகத்திலேயே நடத்திவந்தது. வவுனியா பொதுமைதானமான நகரசபை மைதானமும் பொலிசாரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது,

இம்மாத இறுதியில் பொலிஸார் வேறிடத்திற்கு மாறுவதால் சுமார் ஏழு ஆண்டு கால இடைவெளியின்பின்னர் பொது மைதானமும், நகரசபை மண்டபமும் மக்களின் பாவனைக்குத் திரும்பவும் கிடைக்கவிருக்கிறது.

## பருத்தித்துறை இலங்கை வங்கியில்
# சுயதொழில் உற்பத்தி கடன்திட்டம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி, கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுயதொழில் உற்பத்திச் கடன்கள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் சுயதொழில் உற்பத்திக் கடன்களாக 40,000 ரூபாவை வழங்கியுள்ளது.

அண்மையில் வங்கியில் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போது பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் இக்கடன்களுக்குரிய காசோலைகளைக் கையளித்தார். (52)

# விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரி சந்தியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவரான மிருசுவிலைச் சேர்ந்த அரசநாயகம் தேவநாயகம் (வயது 21) என்பவரும், பின்னுலிருந்து வந்தவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோ. கி. பிரான்ஸிஸ் என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்றமோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரு வயோதிபர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் நாரந்தனையைச் சேர்ந்த 75 வயதுடைய பர்னுந்து அருளப்பு என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் உடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்தில் கன்னுதிட்டியைச் சேர்ந்த எம். தமிழ்தாஸன் (வயது 27), எஸ். தேவரட்ணம்(வயது 23) ஆகிய இருவருமே மோட்டார்சைக்கிளில் வந்து படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - ஆட்டோ விபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்தில் ஆட்டோ குடைசாய்ந்ததில் ஆட்டோவை ஓட்டிவந்தவரான ஓட்டுமடத்தைச் சேர்ந்த ராஜன் ஞானசேகரன் (வயது 18)என்பவரும் மோட்டார் சைக்கிளில் இருந்து வந்தவரான அளவெட்டியைச் சேர்ந்த மரகதம் அருணசலம் (வயது 62) என்ற பெண்ணுமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஆட்டோ ஒன்று குடைசாந்ததில் ஆட்டோவை ஓட்டிச் சென்றவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் யாழ்ப்பாணம் முஸ்லீம் றோட்டைச் சேர்ந்த சுல்தான் முகைதீன் அப்துல் உசைன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

சண்டிலிப்பாயில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் ஒரு வயதுக் குழந்தை ஒன்று படுகாயமடைந்தது.

இவ்விபத்தில் சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த கிருபாவதனி அருள்நேசன் என்ற ஒருவயதுக் குழந்தையே படுகாயமடைந்தது.

காயமடைந்த குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் – சைக்கில்விபத்தில் ஒரு பெண் படுகாயமடைந்தார்

இவ்விபத்தில் சைக்கிளில் இருந்து சென்ற அல்வாய் வடக்கைச் சேர்ந்த தவமணி கதிரவேல் (வயது 50) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

கைதடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

வீதியில் நடந்து சென்றவரான கைதடி தெற்கைச் சேர்ந்த முருகன் கதிரன் (வயது 70) என்ற வயோதிபரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் உடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிராமிய ரீதியில் கருத்தரங்கு

(காங்கேசன்துறை)

இன்றைய அரசியல் நிலையைத் தெளிவுபடுத்தும் வகையில் மயிலிட்டி, ஊறணி, பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் கிராமரீதியில்கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.

விடுதலைப்புலிகளின் காங்கேசன்துறைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் இக்கருத்தரங்குகளை பொதுநல சேவாசங்கங்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுசெய்து நடத்தி வருகிறுர். (86)

## விடுதலைப்புலிகள் தொடர்ந்து சிரமதானம்

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இரண்டாவது தினமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

முதல்நாள் மேற்கொண்ட சிரமதானப் பணி முற்றுப்பெறுமையினுல் இரண்டாவது நாளாகவும் இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. குணம் தலைமையில்மேற்கொள்ளப்பட்ட இச்சிரமதானப் பணியில் புலிகளின் மகளிர் முன்னணியினரும் கலந்துகொண்டனர்.

## பஸ்சேவை நீடிக்க கோரிக்கை

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஆழியவளைவரை நடைபெறும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் வெற்றிலைக்கேணிவரை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப்பிரதேசத்துக்கு யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி டிப்போக்களினுல் நடத்தப்படும் பஸ் சேவைகள் அவ்வப்பகுதிகளிலிருந்து மருதங்கேணி, தாளையடி ஊடாக ஆழியவளைவரை நடைபெற்று வருகின்றன.

இப்பஸ் சேவைகளை குடிசனம் நெருக்கமாக வாழும் இரண்டு மைல் தூரத்திலுள்ள வெற்றிலைக்கேணிவரை நீடிக்குமாறு பொதுஸ்தாபனங்கள் கோரிக்கையை விடுத்திருந்தன. அத்துடன் ஆழியவளையிலிருந்து வெற்றிலைக்கேணி வரையிலான இரண்டு மைல் கரையோர வீதி சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது

வெற்றிலைக்கேணிவரை பஸ் சேவையை நீடிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்காக அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் குழு சிரமதானம் மூலம் திருத்தப்பட்ட இவ்வீதியைபார்வையிட்டுச்சென்றது.

இவ்வீதியை வீதிஅபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தரும் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார். (61)

# “பாவனையாளரின் நலன் பேணப்படவேண்டும்”
## வர்த்தகர்களுக்கு குணம் கோரிக்கை

(பருத்தித்துறை)

“நாட்டில் நிலவிய பயங்கர சூழ்நிலைகளினுல், பொது சேவை ஸ்தாபனங்கள் யாவும் சீரழிந்த நிலைக்குள்ளாகியிருந்தன. நிலைமைகள் தற்போது சீரடைந்துள்ளன. பொதுச் சேவை நிறுவனங்கள் ஒழுங்காக இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியது முக்கியமாகும். வர்த்தகர்கள் இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், பாவனையாளர்களின் நலன்களையும் கருத்திற் கொண்டு செயற்படவேண்டியது முக்கியமாகும்.”

மேற்கண்டவாறு வடமராட்சிப் பகுதி வர்த்தகர் சங்கங்களின் புனரமைப்புக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. குணம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வர்த்தகர்களுக்கான கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க நிதிப்பொறுப்பாளர் திரு. ரஞ்சித் அப்பா, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க யாழ். மாவட்ட நிதிப்பொறுப்பாளர் திரு. ரவி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சிப் நிதிப் பொறுப்பாளர் திரு. ஜெயந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து உரையாற்றிய திரு. குணம் குறிப்பிட்டதாவது:

“வர்த்தகர் சங்கங்களைப் புனரமைத்து வர்த்தக நடவடிக்கைகளை பலப்படுத்துவதனுல் வர்த்தகர்கள் பெரும் பயனடைய முடிவதுடன் வர்த்தக நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்து மேம்படுத்தமுடியும். இதன் அடிப்படையிலேயே வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி வர்த்தகர் சங்கங்கள் புனரமைப்பு செய்யப்படுகின்றன. வர்த்தகர் சங்கங்களின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் செயற்குழு உறுப்பினர்கள் சேவை மனப்பான்மையுடனும், நம்பிக்கையுடனும் செயற்படவேண்டும்.

“வர்த்தகர் சங்கங்க நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் வாத்தக துறையைப் பலப்படுத்தவும் சகல வர்த்தகர்களும் வர்த்தக சங்கங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். வர்த்தகர்கள் நாட்டின் இன்றைய நிலையை மறந்து பாவனையாளர்களைச் சுரண்டக் கூடிய நியாயற்ற எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது. பாவனையாளர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தக்கூடிய பொருளாதாரச் சுரண்டல் நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படமாட்டாது. வர்த்தகர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்த விதமான நடவடிக்கைகளும் ஊக்குவிக்கப்படமாட்டாது.

“தமிழீழப் பகுதியில் தமிழுக்காகப் போராடிக்கொண்டிக்கும் நாம் வர்த்தக நிறுவனங்களில் பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்படாமல் இருப்பது மிகக் கவலைக்குரியதாகும் எனவே வர்த்தக நிறுவனங்களின் பெயர் பலகைகளில் தமிழ்மொழிக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும். தமிழ்மொழிக்கு முன்னுரிமை வழங்கியபின் தேவை ஏற்படின் ஆங்கிலம் போன்ற சர்வதேச மொழி பயன்படுத்தப்படலாம். ஆனுல் தமிழ் அல்லாத வேறெரு மொழிக்கு தமிழீழத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்களில் முன்னுரிமை வழங்கப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும்.” (52)

# வேலணைப் பகுதியில் பம்பாய் வெங்காய செய்கை

(வேலணை)

வேலணைப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையை மேற்கொள்வது சம்பந்தமான கருத்தரங்கு மற்றும் பயிற்சி வகுப்புகளை விவசாயிகளுக்கு இடையே நடத்துவதற்கான ஏற்பாடுகளை வேலணைப்பகுதி விவசாய போதனுசிரியர் திரு. நா. இராசையா மேற்கொண்டு வருகின்ருர்.

தீவுப்பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கை நல்ல பலன்களைக் கொடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் வேலணைப்பகுதியில் நல்ல விவசாய நிலபுலன்கள் அதிகமாக இருந்தும்கூட விவசாயிகளினது அக்கறையின்மை, அசட்டை காரணமாக இப்பகுதி விவசாயிகள் பலருக்கு நல்ல பலன் கிடைக்காமல் இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

# கட்டாக்காலி நாய்களின் ‘அட்டகாசம்’!

(வேலணை)

வேலணைப்பகுதியில் கட்டாக்காலிநாய்களின்தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

கட்டாக்காலி நாய்களினுல் வீதிகளில் போவோர் பயப்பீதியடைந்து வருவதுடன் நாய்கடிகளுக்கும் இலக்காகின்றனர். கடந்த வாரங்களில் சிலரை நாய் கடித்து அவர்கள் விசர் பிடித்து இறந்துள்ளனர். குட்டை, சொறி பிடித்த நாய்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

## றமழான் பண்டிகையையொட்டி
# முஸ்லிம் வட்டாரத்தில்
### உணவு, ஜனசக்தி முத்திரைகள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் றமழான் பண்டிகையை முன்னிட்டு உணவுமுத்திரை, ஜனசக்தி முத்திரைகள் துரிதமாக வழங்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் வட்டார சோனகதெரு கி.சே. அலுவலர் பிரிவில் 3 வது கட்ட சனசக்தி முத்திரைகள் யாவும் கி. சே. அலுவலரினுல் வழங்கப்பட்டுவிட்டன. இப்பகுதியில் 1080 குடும்பங்கள் சனசக்தி உதவியைப்பெற்று வருகின்றன. அரசாங்க நியமனங்கள் அண்மையில் கிடைக்கப்பெற்ற ஒன்பது குடும்பங்களுக்கு. சனசக்தி உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

“இப்பிரிவில் உள்ள மூன்று ப. நோ. கூ. சங்க கிளைகளுக்கும், மூன்று உத்தரவு பெற்ற வியாபாரிகள் கடைகளுக்கு பூரிய குடும்பங்களுக்கு 5-வது சுற்று உணவுமுத்திரையும் தற்பொழுது வழங்கப்பட்டுவிட்டன. இதுவரை உணவுமுத்திரையை பெற்றுக்கொள்ளாதவர்கள், சோனகதெரு கி.சே. அலுவலரின் அலுவலகத்திற்கு வந்து உணவு முத்திரையை இம்மாதம் 30-ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏற்கனவே உணவு முத்திரை வைத்திருப்பவர்களின் குடும்பங்களுக்கு மட்டுமே தற்பொழுது புதிய 5-வது சுற்று உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன” என்றுஇப்பகுதிகி. சே. அலுவலர் எம். எஸ். ஜினூஸ் தெரிவித்துள்ளார்.

இச்சிரமதானப் பணியின் போது வைத்தியசாலை வளவிலுள்ள பற்றைகள் வெட்டப்பட்டு, புல்லுகள் அழிக்கப்பட்டதுடன் வார்டுகளும் கழுவிச் சுத்தம்செய்யப்பட்டன. (61)

## ஆலய உற்சவம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் காவடிகளுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்ருன மாதகல் நுணைசைமுருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28-ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 8-ம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (72)

## சிரமதானம்

(மானிப்பாய்)

யாழ். கோம்பயன் மணல் மயானம் ஜனசக்திபெறும் உறுப்பினர்களால்சிரமதானம் செய்யப்பட்டுள்ளது.

ஜனசக்தி தலைவர் திரு. எஸ். கந்தசாமி தலைமையில் 18ம் 19ம் இலக்க ஜனசக்தி உறுப்பினர்கள் சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மயானத்திலுள்ள பற்றைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டிருப்பதால் பிரதான வீதியூடாக செல்லும் மக்கள் எந்நேரமும் பயமின்றி செல்லக்கூடியதாகஇருக்கிறது. (71)

## ‘அப்போதிக்கரிஸ்’ உதைபந்தாட்டம்:
# சென். மேரிஸ் கழகம் இரு பிரிவுகளிலும் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே, ‘அப்போதிக்கரிஸ்’ வெற்றிக் கிண்ணத்துக்காக கடந்தவருடம் ஆரம்பித்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்தகால அசம்பாவிதங்கள்சம்பந்தமாக இடைநிறுத்தப் பட்டிருந்தது தெரிந்ததே.

இச்சுற்றுப்போட்டி கடந்த வாரம் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பிக்கப் பட்டபோது, முதல் நடந்த இரு போட்டிகளிலும் நாவாந்துறை சென். மேரிஸ் கழகம் வெற்றிபெற்றது.

‘பி’ பிரிவுகளிடையே நடைபெற்ற போட்டியில். சென். மேரிஸ் கழகம் சென். றெக்ஸ் கழகத்தை 3-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு எஸ். றெுபேர்ட் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

‘ஏ’ பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்றபோட்டியில், சென். மேரிஸ் கழகம் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 3-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

மற்றுமொரு ‘பி’ பிரிவுப் போட்டியில், யுத்கார்மல்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துப் போட்டியிடவிருந்த அராலி சில்வஸ்ரார் கழகம் மைதானத்துக்கு வருகைதராததினுல் இவ் ஆட்டம் தடைப்பட்டது. இப்போட்டிக்கு திரு. கே. விமலராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றவிருந்தார். (வி)

## அடையாள அட்டைகள் துரிதமாக விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் துரிதமாக வழங்கப்படுகின்றன.

யாழ் செயகத்துக்கு நேற்று 1500 அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து வந்துள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உதவி அரசாங்க அதிபர் மூலம் இந்த அடையாள அட்டைகள் துரிதமாக வழங்கப் படவிருக்கின்றன. (152)

## தீவுப்பகுதியில் இன்று தேனிசை செல்லப்பா

(யாழ்ப்பாணம்)

தேனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சியை கண்டு களிக்கும் வாய்ப்பு தீவுப்பகுதி மக்களுக்கு இன்று புங்குடுதீவு மகா வித்தியாலய முன்றலில் கிடைக்கும்.

இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திராசா (மாத்தயா) யோகி, கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் பங்குபற்ற இருக்கிறுர்கள்.

இந்நிகழ்ச்சியை தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவுப் பகுதி பொறுப்பாளர் ஜேம்ஸ் ஆரம்பித்து வைப்பார். அரசியல் பொறுப்பாளர் காஸ்ரோ தலைமை வகிக்கிறுர் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## புதிய சோலைவரிகள்

[மன்னுர்]

மன்னுர் மாவட்டத்தில் புதிய சோலைவரிகள் உப அலுவலகங்களால் தீர்மானிக்கப் பட்டு குடியிருப்பாளர்களுக்கு விபரங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை மன்னுர் பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஏஞதிநாதன் உப அலுவலகப் பொறுப்பாள மூலம் செய்து வருகின்றுர்.

## “இன்று நிலவும் அமைதி நிரந்தரமானதல்ல! தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீரவேண்டும்”

— தினேஷ்

(வவுனியா)

“அன்னை பூபதியின் உயிர்த்தியாகம், காலத்தாற் ஈழத் தமிழ் மக்களுக்குச் செய்த அரும்பெரும் தியாகமாகும். வரலாறுகளில் சிபிச் சக்கரவர்த்தி, குமணன், மனுநீதி கண்ட சோழன் ஆகியோர் நீதிக்காகப் போராட வேண்டி தங்களுக்கு வேண்டியவர்களின் உயிர்களையோ உடைமைகளையோ இழந்ததுபோல, தமிழ் ஈழ வரலாற்றில் அன்னை பூபதியின் தியாகமும் காலத்தாற் தமிழினத்துக்காக நீதிக்காகச் செயயப்பட்ட அருந்தியாகமே. இந்திய ஆக்கிரமிப்புப் படையினதும், ஸ்ரீலங்கா அரசினதும், ஈழத்தின் சில துரோகக்கும்பல்களினதும் துரோக நெருக்கடி நிலையில் ஈழத்தமிழினம் திண்டாடிய காலகட்டத்தில் அவர் நீதிக்காக உண்ணுவிரதமிருந்துஉயிர்நீத்தார். தன்னுயிரை துச்சமென மதித்து உயிரை நீத்த பெரும் அன்னை திருமதி பூபதியாகும்”

இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு தினேஷ் கடந்த வாரம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற அன்னை பூபதியின் இரண்டாவது நினைவஞ்சலி எழுச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் உரையில் மேலும் கூறியதாவது:-

“விடுதலைப்புலிகள் அஹிம்சையில் அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளவர்கள். சிங்கள பேரினவாத சக்திகளின் ஒடுக்குமுறைகளே அவர்களை ஆயுதம் தூக்க உதவிய காரணியாகும். புலிகள் ஆயுதங்களை கீழே போடுவது என்ற பேச்சு; எதிர்காலத்தில் சிங்கள அரசு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை அணுகும்முறையைப் பொறுத்தே தங்கியுள்ளது. தற்பொழுது ஏற்பட்டிருக்கும் அமைதி எமது தாயக மண்ணில் நிரந்தர அமைதி என்று கருதமுடியாது. இது ஒரு தற்காலிக அமைதியே” என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரலாறு கண்டிராத வகையில் மக்கள் கலந்துகொண்ட இப்பேரெழுச்சி விழா வவுனியா சிற்றூர் அவையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கண்டி வீதி, ஹொரவபொத்தனை வீதி, யாழ். வீதி ஆகியவற்றின் ஊடாக பல்லாயிரக் கணக்கான மக்கள் லொறிகளிலும், உழவு இயந்திரங்களிலும், துவிச்சக்கர வண்டிகளிலும் வயது வேறுபாடின்றி எழுச்சிக் கோஷங்களை இசைத்தவண்ணம் வவுனியா நகா சபை மைதானத்தை அடைந்தனர்.

வவுனியா நகரசபை மைதானம் ஏறத்தாழ ஏழு வருடங்களின் பின் பொதுமக்களின உபயோகத்திற்காக அனுமதி அளிக்கப்பட்டது ஒரு சிறப்பம்சமாகும்.

விழாவுக்கு வவுனியா நகர சிற்றூர் அவைத் தலைவர் வைத்திய கலாநிதி சி.க. பாலசிங்கம் தலைமை வகித்தார். வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுத் தலைவி, தாண்டிக்குளம் சிற்றூர் அவைத் தலைவர் யோகானந்தம், வவுனியா மாவட்ட இணக்க சபை அமைப்பாளர் மா. பொன்னம்பலம், ஆசிரியர் அப்துல் சமது ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

விழாவின் இறுதி நிகழ்ச்சிகளாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச் சேர்ந்த திருமதி தேவமனேகரி நாகேஸ்வரனின் இன்னிசைக் கச்சேரியும், வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கலை சலாசாரக் குழுவின் “நடந்து வந்த பாதை” என்ற ஜீவனுள்ள நாடகமும் இடம் பெற்றது.

## இமையாணன் கழகம் வெற்றி

[பண்டத்தரிப்பு]

மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில், பழைய முறையினுலான நான்கு பேர் கொண்ட போட்டியில் உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. ஆறு பேர் கொண்ட பழைய முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது (72)

## கடற்றொழிலாளரின் வள்ளங்கள் 6 மாதமாகியும் வழங்கப்படவில்லை

[மட்டக்களப்பு]

வன்செயலால் பாதிக்கப் பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வழங்கவென வட கிழக்கு மாகாண சபையால் அனுப்பப்பட்ட 45 கண்ணுடி இழைப்படகுகள் மட்டக்களப்பு செயலகத்தில் கிடக்கின்றன,

வன்செயலால் பாதிக்கப் பட்ட கடற்றொழிலாளர்களின் பட்டியல்கள் இதுவரை உதவி அரசாங்க அதிபர்களிடமிருந்தும் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலரிடமிருந்தும் வந்துசேராததினுல் இப்படகுகள் இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர் வந்து சேர்ந்த மேற்படி படகுகள் இன்றுவரை வழங்கப்படாமலிருப்பதுபற்றி பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் பெரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்,

ஒவ்வொன்றும் ஆறுயிரம் ரூபா பெறுமதியான மேற்படி படகுகளில் 30 படகுகள் அம்பாறை மாவட்டத்துக்குரியவை என்று கூறப்படுகிறது.

ஆனுல் இதற்கான எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் எதுவும் மாகாண சபையிடமிருந்து கிடைக்கவில்லை என்று புனர்வாழ்வு இணைப்பு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சுடரொளி விளையாட்டுப் போட்டி

(நெல்லியடி)

வீர மரணமடைந்த நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர் காப்டன் மோகன் மாஸ்ரர், லெப்டினன்ட் முரளி, இளம் புலி பட்சம் ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி இம்மாதம் 27ம் திகதி, சுடரொளி விளையாட்டுக் கழகம் மாபெரும் விளையாட்டுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் விளையாட்டுக் கழகங்கள், செயலாளர், சுடரொளி விளையாட்டுக்கழகம், துன்னுலை தெற்கு, கரவெட்டி என்னும் முகவரியில் எதிர்வரும் 23ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படி கோரியுள்ளனர். (55)

## நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸிஹர் முடிவு | — 4. 25 |
| சுபஹ் | — 4- 40 |
| உதயம் | — 6-00 |
| லுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-22 |
| மஃரிப் | — 6-20 |
| இஷா | — 7-40 |

## கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கு கோமாரிநோய்த்தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் பணி துரித கதியில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது,

இந்த நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படும் பகுதிகளில் அதற்கு முதல் நாளன்று ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு இடம், நேரம் பற்றி தெரிவிக்கப்படுகின்றது என்றுசங்கானை கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு, சில்லாலை, பனிப்புலம், மாதகல், பெரிய விளான் ஆகிய பகுதிகளில் இதுவரை பெருந்தொகையான மாடுகளுக்கு கோமாரி தடுப்பு ஊசி மருந்து போடப் பட்டுள்ளதாகவும், ஏனைய இடங்களிலும் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கால்நடை வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ஒரு ஊசி மருந்து குப்பியைக் கரைத்தால் அதை உடனடியாக ஐம்ம்து மாடுகளுக்கு ஏற்றப்படவேண்டும்என்றும் ஒரு நிலையத்தில் கூடுதலான மாடுகள் கொண்டுவரும் பட்சத்தில் இந்த ஊசி மருந்தை வீணுக்காது பயன்படுத்திக் கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார். (72)

## பண்டத்தரிப்பு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நிறை 350 கிறும் இருக்கவேண்டும் என்றும், இதன் விலை 4 ரூபா 90 சதமாக இருக்கவேண்டும் என்றும் இதனை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் இக்கூட்டத்தில் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார்.

சகல கடைகளையும் இரவு எட்டு மணி வரை திறந்து வைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பாதுகாப்புப்சேவையை நடைமுறைப்படுத்துவது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (72)

## வட்டக்கிளையின் ஆரம்ப கூட்டம்

[மட்டக்களப்பு]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டக்கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டம் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது,

வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பொறுப்பாளர் திரு. நெல்சன் தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் 35 சிற்றூர் கிளைகளின் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் கலந்துகொண்டனர்.

## நினைவு விழா

(புலோலி)

தென் புலோலியூர் அறிஞர் கந்தர் முருகேசனுரின் 25-வது ஆண்டு நினைவு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 14-ம் திகதி புலோலியில் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(நெல்லியடி)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அமரர் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடாத்தி வருகின்றது. (55)

## 3000 காணி உறுதிகள்

[யாழ்ப்பாணம்]

1988 ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து 1988 டிசம்பர் 31ம் திகதி வரை எழுதப் பட்ட உறுதிகளைப் பதிவதற்கு காணிப் பதிவகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை மேலே குறிப்பிட்டகாலங்களுக்கு உட்பட்ட 3000 உறுதிகள் பதிவுக்காக காணி பதிவு அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளதாகதெரிய வருகிறது. (153)

டுபாய் இறங்கவிருந்த

# எயர்லங்கா விமானத்தில்

## குண்டு வைக்கப்பட்டதாக மிரட்டல்

[லண்டன்]

டுபாய் விமான நிலையத்தில் வந்திறங்கும் 'எயர் லங்கா' விமானத்தில் குண்டு வைக்கப் பட்டுள்ளதாக தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட மிரட்டலையடுத்து டுபாய் விமான நிலைய பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த மிரட்டல் குறித்து ஆராய இலங்கையிலிருந்து சி. ஐ. டி. பொலிஸார் குழு ஒன்று டுபாய் சென்றுள்ளது.

லண்டனிலிருந்து கொழும்பு செல்லும் விமானத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக டுபாய் விமான நிலையத்திற்கு கடந்த ஒரு வாரத்துள் மூன்று முறை தொலைபேசி மிரட்டல் கிடைத்துள்ளது. இதையடுத்து இவ் விமானம் அவசர அவசரமாக இறக்கப்பட்டு விமானம் முழுவதுமாகச்சோதனையிடப்பட்ட போதிலும் குண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இதுபற்றி விசாரணை நடாத்த பொலிஸ் அதிகாரி ஓ. கே. ஹேமச்சந்திரா தலைமையில் சி. ஐ. டி. பொலிஸார் டுபாய் சென்றுள்ளனர். இதுதொடர்பாக இவர்கள் அங்கு தீவிர விசாரணையை மேற்கொள்வார்கள்.

குண்டுப் பயமுறுத்தலை இனந்தெரியாதவர்கள் ஏன் மேற்கொகிறார்களெனச் சந்தேகம் எழுந்துள்ளதாக விமானநிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## சடலம் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். நகரவீதியில் அனாதரவாகக் காணப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் சிகிச்சையின் போது மரணமானார். (56)

## யாழ். நகரில் பிரிட்டிஷ் அதிகாரி

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் தூதரகத்தின் 3வது உயர் அதிகாரி திரு. ஜேன் கோர்பீல்ட், நேற்று யாழ். நகர் வந்தார்.

யாழ். நகரின் தற்போதைய நிலைமையை அவர் நேரில் பார்வையிட்டார்.

நேற்று மாலை, ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் யாழ்ப்பாணம் அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்திற்கு விளையாட்டு உபகரணங்களை அவர் அன்பளிப்புச் செய்தார். (153)

## 12 ஆண்டுகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மைதானப் பகுதி எங்கும் குழுமி இருந்தது.

தெற்குப் பக்கம் ஆண்களும், வடக்குப் பக்கம் பெண்களும் இருக்க, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர், 20 அடி உயரமுள்ள மேடையில் இராணுவ உடையில் வீற்றிருந்த காட்சியும், பக்கவாத்தியங்களுடன் தேனிசை செல்லப்பா குழுவினர் அளித்த இசை மழையும் என்றென்றும் மனதை விட்டகலாது.

இசை நிகழ்ச்சியின் பின்னர், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பஸ் சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.

## நேர்முகப் பரீட்சை பின்போடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று நடைபெறவிருந்த வைத்தியசாலை ஆண், பெண் சுகாதார சுத்திகரிப்பாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை மூன்றாவது தடவையாகக் காலவரையறையின்றி பின்போடப்பட்டுள்ளது.

நெற்று இந்நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்க வந்திருந்தவர்கள் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்

இந்நேர்முகப் பரீட்சைக்கான திகதி ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (56)

கண்டியை ஆண்ட

# கடைசி மன்னனுக்கு தமிழகத்தில் நினைவுத் தூபி

(நமது நிருபர்)

கண்டி இராஜதானியின் கடைசி மன்னனாகத் திகழ்ந்த சிறீ விக்கிரமராஜசிங்கனைக் கௌரவிக்கும் முகமாகத் தமிழகத்தில் நினைவுத் தூபியும், நினைவு மண்டபமும் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு 7 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. இந்திய அரசும் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

சிறீ விக்கிரமராஜசிங்கன் தமிழ் மன்னனாகத் திகழ்ந்த காரணத்தினாலேயே அவருக்கு அங்கு நினைவுத் தூபி எழுப்பப்படவுள்ளது. 1824ம் ஆண்டு இம்மன்னன் தமிழகத்திலுள்ள வேலூர்ச் சிறையிலேயே இறந்து, அங்கேயே அவரது சடலம் புதைக்கப்பட்டது.

1815ம் ஆண்டில், பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியதும், மன்னன் இராஜசிங்கன் அரச கட்டிலிலிருந்து அகற்றப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்டு, மொறிஷியஸ் தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் இறுதிக் காலத்தில் வேலூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டு, அங்கேயே மரணமானார். (அ)

# புங்குடுதீவில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு

(புங்குடுதிவு)

புங்குடுதீவுப் பகுதியில் கடந்த சில நாட்களாகக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

புங்குடுதீவு 11-ம் வட்டாரத்திலுள்ள மக்கிக்குண்டு என்னும் பகுதியிலுள்ள பலசரக்குக் கடையொன்று கடந்த சனிக்கிழமை உடைக்கப்பட்டு அங்கிருந்து அத்தியாவசியப் பொருள்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (101)

## புங்குடுதீவு பொதுநூலகம் வாசகர்களுக்கு

# இப்படி ஒரு குழப்பநிலை!

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சந்தைப் பகுதியிலுள்ள பொது நூலகத்திற்கு என்ன நடக்கிறது? நினைத்த நேரத்தில் திறந்து பூட்டும் நூலகமாகச் செயல்படுகிறது.

இப்பொது நூலகம் கடந்த சில நாட்களாகக் காலை நேரங்களில் திறக்கப்படுவதேஇல்லை! ஆனாலும் பிற்பகல் இரண்டு மணியளவில் நூல் நிலையம் திறக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் வாசகர்கள் எந்தெந்த நேரத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் நூல்களைப் படிக்கவரலாமென்பதில் குழம்பிக் கிடக்கிறார்கள். (101)

## ஆயுள்வேத வைத்தியசாலையில்

# நோயாளர் படும்பாடு!

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பெரிதும்ஏமாற்றப்படுகிறார்கள்!

டாக்டர் வரும் நேரங்களில் மருந்துக்கலவையாளர் இருப்பதில்லையாம். மருந்துக் கலவையாளர் இருந்தால் டாக்டர் இருக்கமாட்டாராம்.

அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை கடந்த நான்கு சனிக்கிழமைகளிலும் தொடர்ந்து பூட்டப்பட்டிருந்ததைக் காண முடிந்தது.

இப்படியான நிலையினால் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருந்து வெறுங்கையுடன் வீடு திரும்புகிறார்கள். (101)

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சியில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்திய- இலங்கை கலாசார சம்மேளனத்தின் வருடாந்த கூட்டத்தில் பங்கு பற்றிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். செல்லச்சாமி கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதிதிரு. பிரேமதாஸா இலங்கையில் இன அமைதிக்கும், பரஸ்பர உறவு விருத்திக்கும் செய்துள்ள பங்களிப்பு குறித்து இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் விசேடமாகப் பாராட்டிப் பேசினார்கள்.

இதன் காரணமாகவே விருது வழங்கும் வைபவத்தை இலங்கையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டதாக திரு செல்லச்சாமி தெரிவித்தார்.

இந்த வைபவத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்திய இலங்கை கலாசார சம்மேளனத்தின் தலைவர் திரு. பி. ராஜகோபால் அடுத்த மாத முதல் வாரத்தில் இலங்கை வருவார்.

# சத்திரசிகிச்சைக்குட்பட்டு சாதனை படைத்த தாதி

(ஹூஸ்ரன்)

30 வயதுக்குள் 35 தடவைகள் தன்னைச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தியதில் திருப்தியடைந்துள்ள தாதி ஒருவர் 70 ஆஸ்பத்திரிகளில் 100 டாக்டர்களைச் சந்தித்து சிகிச்சையும் பெற்றுள்ளார்

சத்திரசிகிச்சைக்கான மயக்க மருந்து கொடுக்கப்பட்ட பல தடவைகளில் மரணத்தின் விளிம்பையே தொட்டுவிட்டு வந்த இவரது மார்பு, வயிறு, முதுகுப்புறம் உட்பட உடலின் பல பாகங்களிலும் சத்திர சிகிச்சையின்போது கீறிக் கிழிக்கப்பட்ட வெட்டுக் காயங்கள் தாறுமாறாகக் காணப்படுகின்றன

இருதடவைகள் மார்புக் கட்டிகளை அகற்றவும், மூன்று தடவைகள் கர்ப்பக்கட்டிகளை நீக்கவும், மேலும் மூன்று தடவைகள் கருச்சிதைவுக்காகவும், பல தடவைகள் இதர நோய்கள் என்று கூறிச் சத்திரசிகிச்சை செய்துள்ளார்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த ஒலீவியா என்ற இவர் இவ்வாண்டு மட்டும் பத்துத் தடவை சத்திரசிகிச்சை செய்துகொண்டார் தனது தாதி வேலை அனுபவத்தைப் பயன்படுத்தி டாக்டர்களை ஏமாற்றிச் சத்திரசிசிச்சை செய்வித்துக்கொண்டதில் 'அலாதி' பெருமிதம் கொள்கிறார்.

பலவந்தமாகத் தன்னைச் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்திக்கொள்வதில் ஏதோ ஒருவித திருப்தி அடைந்துகொள்ளும் நோய்க்கு உள்ளானவர் என்று நிபுணத்துவ டாக்டர்கள் கூறுகிறார்கள். (அ)

## கும்பாபிஷேகம்

(புலோலி)

தும்பளை நெல்லண்டை கோட்டக்கடவை வைரவர் கோவில் மகா கும்பாபிஷேகம் மே மாதம் 9ம் திகதி நடைபெறவுள்ளது. மறு நாள் 10ம் திகதி விசேட அன்னதானம் இடம்பெறும். (61)

## தமிழ் மக்களே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைவகித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கா. மகேந்திரஜா (மாத்தயா) தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

நாம் அறிந்த காலந்தொட்டும் அத்துடன் படித்த வரலாற்று நூல்களிலும் சிங்கள பௌத்தம் தமிழ் இனத்தை அழிப்பதற்கு கங்கணம் கட்டி இருந்ததைக் காண்கிறோம்.

தேனிசை செல்லப்பா, ஈழத் தமிழரின் துன்பதுயரங்களைக் கண்டு, கவலைப்பட்டுத் தானும் ஒரு போராளியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். விடுதலைப் போராளிகளான எமக்கும், மக்களுக்கும் பாலமாகப் பல பாடல்களைப் பாடி எமக்கும், மக்களுக்கும் உற்சாகத்தைத் தந்தார்.

எமக்கு உதவி செய்தமையால், தமிழ்நாட்டில் உளவுப் படையினரால் பல தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டார். எமது விடுதலைக் கீதங்கள் பலவற்றை இசையமைத்தும் தந்துள்ளார். (153)

## தலைவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யால் காணமுடிந்தது.

இவ்வாறு நேற்றிரவு யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இசைநிகழ்ச்சி வைபவத்தில் கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார்.

கவிஞர் காசி ஆனந்தன் இராணுவ உடையில் நின்று பேசியபோது மக்கள் ஆர்வத்தோடுபார்த்துக்கொண்டு நின்றார்கள்.

கவிஞர் மேலும் பேசியதாவது: "இந்திய அரசாங்கம் எத்தனை வழிகளில் எமக்கெதிராக இயங்கியது? தேசிய இராணுவம் ஒன்றை உருவாக்கி, ஆயுதம்கொடுத்து உதவியளித்தது. அந்தத் தேசிய இராணுவத்தையே தமிழ்நாட்டில் இறங்கவேண்டாம் என்று முதலில் கூறியவர் அமைச்சர் சிதம்பரம்தான். ஒரிசாவில்கூட தேசிய இராணுவத்தை வரக் கூடாதென்று முதலில் குரல் கொடுத்தது இந்திரா காங்கிரஸ்தான். இப்பொழுது அந்தமான் தீவுக்கு அனுப்பிவைக்க இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகள் இருப்பது அந்தமானல்ல... புங்குடுதீவு, மல்லிகைத் தீவுகளில் தான் என்பதைப் பெருமிதத்துடன் கூறுகின்றோம்" என்றார். (152)

## தமிழனுக்காக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும், உணர்வுள்ள மக்களும் இருக்கின்றபடியால் தமிழீழம் மலர்ந்தே தீரும்.

நான் இதுவரை அரசியல் வாதிகளைப் பாடவில்லை. தமிழுக்கும் மண்ணுக்கும் போராடும போராளிகளையே எனது பாடல்களில் பாடியுள்ளேன்" என்றார். (153)

## சிகரெட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளனரென்றும், மதுப்பிரியர்கள் முன்னைய ஆண்டிலும் கடந்த ஆண்டு தொடர்ந்து அதிகளவு வருமானத்தை அரசுக்குத் தேடிக் கொடுத்துள்ளனர் என்றும் மத்திய வங்கியின் 1989ம் ஆண்டு அறிக்கை புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு முதல் மதுபானம், சிகரட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் மது, சிகரட் பிரியர்கள் தமது மோகத்தை குறைந்துக் கொள்வதற்குப் பதில் அவற்றில் மேலும் நாட்டம் காட்டும் போக்கையே அவதானிக்க முடிந்தது என கலால் ஆணையாளர் திரு. சந்திரரத்ன தெரிவித்துள்ளார். (அ)

## கலை புராதன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது தெரிகிறது. இப்பொழுது மக்கள் டிஸ்கோ, சினிமா போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளைக் கைவிட்டு, எழுச்சிக் கீதங்களைக் கேட்குமளவுக்கு வந்திருக்கின்றனர். கலை தான்உலகத்துக்கு வழிகாட்டவேண்டும்.

"கல்வி என்பது பட்டம் பெறுவதல்ல. போராட்டத்தில் இறங்கியிருக்கும் போராளிகள், பல நவீன கருவிகளை இயக்கக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாளை களத்துக்கேற்ற இந்தக் கல்வியைப் பல்கலைக்கழகம் சென்று படிக்கத் தேவையில்லை.

"பல பொருளாதார நிபுணர்கள் பல திட்டங்களைத் தீட்டுவார்கள். புத்தகத்தோடு அவர்களது திட்டங்கள் முற்றுப்பெற்றுவிடும். ஆனால் போராளிகள் அதற்கு அப்பால் சென்று, திட்டங்களைத் தீட்டிப் பொருளாதார நிபுணரைவிடச் செயற்படுத்துகிறார்கள்.

"கல்வி என்பது மண்ணோடு வளரவேண்டும்; மக்களைப் புரியத்தக்தாக அமையவேண்டும். மண்வாசனை உள்ளதாக இருக்கவேண்டும். நேர்மையான தன்மை உள்ளதாக இருக்கவேண்டும்" என்றார். (152-153)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306 81.